ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2445/33 - 2025 ජූලි මස 16 වැනි බදාදා - 2025.07.16

2445/33 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர் இல.: WLP/LAN/FLD 04/ACQ/36.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மாத்தறை மாவட்டத்தின் வெலிபிடிய பிரதேச செயலாளர் பிரிவின் ஜம்புரெகொட மேற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள க.ஸி. 820170 ஜம்புரெகொட மேற்கு சேவா பியச அமைப்பதற்காக காணி எடுத்துக் கொள்வதற்கு அவசியமாகி உள்ளது.

01. துண்டு இல. 01

காணியின் பெயர் : வேமுல்ல குருந்துவத்த; விபரம் : வீட்டுத் தோட்டம், நிலையான கட்டடம் ஒன்று உள்ளது; உரிமை கோருவோர் : ஜம்புரெகொட கமாச்சிகே விஜயசேன, வேமுல்லவத்த, ஜம்புரெ கொட, வெலிகம; விஸ்தீரணம் : 0.0177 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வெலிபிடிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
வெலிபிடிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
வெலிபிடிய.

EOG 07 - 0196

1A - G 044866 — 14 (2025/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*